உ
சிவமயம்



29.04.2015 அன்று சிவபதமடைந்த

# இளஞ்சுடர் செல்வன் சிற்சபேசன் ரவிவர்மா

அவர்களின்

# நினைவுமலர்

மன்மத வருடம் வைகாசி மீ 16ந் திகதி

30.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இளஞ்சுடர் சிற்சபேசன் ரவிவர்மாவின்
தாய்மாமன் காலஞ்சென்ற **திரு. க. சிவபாலன்**
அவர்தம் துணைவியர் காலஞ்சென்ற
**திருமதி. வாசுகி சிவபாலன்**
ஆகியோருக்கு இந்நூல்
சமர்ப்பணம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காப்பு

குரும்பசிட்டி யம்பதிவாழ்ந்த சீரோன்சுப்பிர
மணியம் மகன் சிற்சபை யீசன் யான் - என்
பெற்றவன் நினைவு மலர் கொணர
நற்குஞ்சரத் தான்முதல் எல்லோரும் காப்பு

# திதி வெண்பா

மன்மத வாண்டின் மலர்ந்தநற் சித்திரைத் திங்கள்
எண்ணி ரண்டின் வளர்மதி ஏகாதசி, பூரத்துநாள் - உயிரினுமினிய
மைந்தன் ரவிமர்மச் சுடரொளி ஈதூழ்நீத்து
ஈசனடி சேர்ந்த நல் நாள்.

# யாக்கை நிலையாது

பஞ்ச பூதங்களாலாய இவ்வுடல் என்றோஅழியும் தன்மையது
ஆனால் ஆத்மா அழிவென்பது இல்லாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞ்சுடர்

## செல்வன் சிற்சபேசன் ரவிவர்மா



ஒளிர்ந்தது
21.09.1995

அணைந்தது
29.04.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் செல்வன் சிற்சபேசன் ரவிவர்மா அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானின் அருட்பார்வையும், அன்னை முத்துமாரிஅம்பாளின் அருளாசியும், பொன் பரமானந்தர் மகா வித்தியாலயத்தின் அறிவொளியும் பெற்று கற்றவர்களையும், கலைஞர்கள் பலரையும் உலகிற்கு உவந்தளித்து பெருமையுடன் திகழ்ந்த குரும்பசிட்டிக் கிராமம் இன்று, காலத்தின் கொடுமையால் கொலுவிழந்து அழகிழந்து அபலையாய் நிற்கிறாள். அங்கு செந்தமிழ் பற்றும் சைவநற்பண்பும் கொண்ட உயர்குடி மேலோர் காலஞ்சென்ற ஆசிரியர் சுப்பிரமணியம் ஆசிரியை சரஸ்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வன் சிற்சபேசனுக்கும், காலஞ்சென்ற ஆசிரியரும் சக்தி பவர் லூம்ஸ் (Sakthy Power Looms) உரிமையாளருமான கதிரவேலு சிவசிரோன்மணி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி குணதேவிக்கும் அவர் தம் இல்லறத்தின் பயனாக ஏகமகனாக அவதரித்தவர் தான் செல்வன் ரவிவர்மா அவர்கள்.

அரியது கேட்ட வேலவனுக்கு "அரிது அரிது மானிடராதல ரிது" என ஔவையால் சொல்லப்பட்டதும் "எண்ணிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிது காண்" எனத் தாயுமானவரால் போற்றப்பட்டதும் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே" என அப்பர் பெருமான் ஏமாப் பெய்தியதும் "மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் களிப்பெய்தியதுமாகிய இப் பெறுதற்கரிய மானிடப் பிறவியை ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டு புரட்டாதி மாதம் இருபத்தோராம் நாள் அனுபவிக்கத் தொடங்கினார் செல்வன் ரவிவர்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரிதேவி, விமலாதேவி, சக்திதேவி (Germany) எனும் முப்பெருந்தேவியரையும் பெரியன்னையராகப் பெறும் பேறுபெற்றவர் இவர். காலஞ்சென்ற கட்டட நகர வடிவமைப்பாளர் (Architect & Planner) சிவபாலன், ஜெயபாலன் ஆகியோர் இவர் தம் மாதுலன்கள், செல்வி நர்த்தனா (கனடா) இவரின் தலைமாமன் மகளும், செல்வி தர்நளினி (கொழும்பு), செல்வன் விதுஷன் (ஜேர்மனி) என்போர் உடன் பிறவா சகோதரர்களுமாவார். சுமதி, வாகீசன் (Germany) என்போர் இவர் தந்தை வழி மாமியும் சித்தப்பாவுமாவார்.

தாய்மாமன், அவர்தம் துணைவியர், தாய்வழிப் பாட்டன் பாட்டி ஆகியோரின் தொடர் இழப்புக்களின் காரணமாக சிங்கப்பூரில் பிறந்திருக்க வேண்டிய இவர் இலங்கை கொழும்பு நகரில் பிறந்து தனது முதலாண்டு கால வாழ்க்கையை பல இன்னல்களுக்கிடையே தன் தாயார், பெரியன்னை பராமரிப்பில் கொழும்பு நகரிலேயே கழித்திட நேர்ந்தது. பின் தன் இரண்டாவது வயது ஆரம்பத்தில் தன் வாழ்க்கைப் பயணத்தை சிங்கப்பூரில் தொடர்ந்தார். பெரியன்னை யின் அன்பிலும் அரவணைப்பிலும் தன் இளமைக்காலத்தை இனிதே களித்திட்ட இவர், தன் குழந்தைப் பருவத்தைக் கடந்து பிள்ளைப் பிராயம் அடைந்தார்.

மனிதப் பிறவியின் மட்டற்ற செல்வமாம் கல்விச் செல்வத்தை சிங்கப்பூரில் ஈட்டத் தொடங்கிய இவர் Yishun Northland Primary School இல் தனது தொடக்கக் கல்வியையும் Bishan Kuo Chuan Presbyterian Secondary School இல் தன் மேல் நிலைக் கல்வியையும் பயின்று நன்கு தேறினார். தன் உடல் நிலை காரணமாக நேரடியாகத் தொடர்ந்து பள்ளிக்குச் சென்று பாடங்களைப் பயில முடியாத இவர், தன் விடாமுயற்சியாலும் கல்வி கற்பதில் உள்ள ஆர்வத்தினாலும் வீட்டில் இருந்தவாறே தன் பெற்றோரிடத்தும் தொலைதொடர்பு கணணி சாதனங்கள் மூலமாகவும் கல்வி கற்று தொடர்ந்து பரீட்சையில் சித்தி பெற்று, லண்டன் கேம்பிறிச் சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். சிங்கப்பூர் Inova Junior College இல் தன் உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக் கல்வியை தொடங்கிய இவரால் தன் மோசமான உடல் நிலையாலும் போதிய ஆதரவு கிடைக்காமையாலும் தன் உயர் நிலைக் கல்வியை அங்கு தொடரமுடியாமல் போனது.

தன் குன்றாத ஆர்வத்தினாலும் எதிர்காலக் கனவுகள் பல வுடனும் இலங்கை வந்து தன் கல்விச் செல்வத்தை பெருக்க வேண்டும் என்று எண்ணிய இவர், கொழும்பில் தனியார் பள்ளியில் சேர்ந்து தன் கல்விப் பயணத்தைத் தொடர்ந்தார். தான் கொண்டிருந்த நோயின் காரணத்தினாலோ என்னவோ தான் ஒரு விஞ்ஞானி ஆக வேண்டும் பல மருத்துவக் கண்டு பிடிப்புகளை செய்ய வேண்டும் என்ற தீராத ஆசை மேலோங்க இரசாயனம், உயிரியல் பாடங்களில் அதிக கவனம் செலுத்தி மீண்டும் அப்பாடங்களில் கேம்பிறிச் சாதாரணதர பரீட்சை களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்.

தன் தாயின் ஆதரவும் பெரியன்னையின் அரவணைப்பும் தன் விடாமுயற்சியும், ஆர்வமும் இவரை மேலும் மேலும் கல்வி கற்க தூண்டியதுடன் இவ்வாண்டு கேம்பிறிச் உயர்தர தேர்வுக்கு விண்ணப் பிக்கவும் செய்தது. துரதிஷ்ட வசமாக தன் நீண்ட ஆசைகளுடனும், எதிர்காலக் கனவுகளுடனும் இவர் இவ்வுலகைவிட்டு நீங்குவதாயிற்று.

கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளமும் காண்போரைக் கவரும் முகலாவண்யமும், வந்தோரை உபசரிக்கும் பண்பும் இவருக்கு பல நண்பர்களையும், அயலவர்களையும் ஈட்டித் தந்தன. சமயப் பற்றும் இறை நம்பிக்கையும் கொண்ட இவர் தனது இளமைக் காலத்திலேயே பல ஆலய தரிசனங்கள் செய்யும் பேறு பெற்றவர். இலங்கையில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற சிவஸ்தலங்களையும் இந்தியாவில் பஞ்சபூத தலங்கள், நவக்கிரக தலங்கள், ஆறுபடைவீடுகள் போன்ற பல தலங்களையும் தரிசித்து தன் உடல்நிலை தேற வேண்டி நின்றார்.

தன் வாழ்க்கையின் எல்லையை உள்ளுணர்ந்தோ என்னவோ தன் விருப்பம் போல் தாய்நாட்டிற்கும், தான் வளர்ந்த நாட்டுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாலும் இந்தியா, மலேசியா, ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, கனடா போன்ற ஆசிய ஐரோப்பிய நாடுகளுக்கு தன் தாயாருடன் சென்று தன் உறவினர்களையும் நண்பர்களையும் அறிந்து கொண்ட துடன் பார்த்தவர் மனங்களில் எல்லாம் நீங்கா இடம் பிடித்து வந்தார். குழந்தையுள்ளம் கொண்ட இவர் தன்னைவிட வயதில் மூத்தோர் பலரையும் தன் நண்பர்களாக்கிக் கொண்ட பண்பினர். இவர் தன் விடாமுயற்சியாலும் ஆர்வத்தினாலும் பொது அறிவு, சமயம், விஞ்ஞானம், மருத்துவம், சமையல் போன்ற பல துறைகளில் பரந்த அறிவு பெற்று பலருக்கும் அறிவுரை கூறுமளவிற்கு அறிவாற்றல் கொண்டு விளங்கினார்.

அன்பு, அறம், நீதி போன்ற உயிருடமைகளையும் அன்புடமை, நன்றியுடமை போன்ற பண்புடமைகளையும் கொண்டு வாழ்ந்த சிறிது காலத்திலேயே வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து எல்லோர் மனத்திலும் நீங்கா இடங்கொண்டு நிலைத்திட்ட ரவிவர்மா எனும் இளஞ்சுடருக்கு பீடித்த நோய்க்கு ஏற்ற சரியான மருத்துவம் அளிக்காத காரணத்தால் தன் இனிய தாய் தந்தையர் கலங்கவும், பெரியன்னையர் கதறவும், உடன்பிறவா சகோதரர்கள் புலம்பவும், உற்றார் உறவினர் அயலவர், நண்பர்கள் வருந்தவும் தனது 19வது வயதில் ஈராயிரத்து பதினைந்தாம் ஆண்டு சித்திரை மாதம் இருபத்தொன்பதாம் நாள் இவ்வையகத்தில் அணைந்து எல்லாம் வல்ல சிவபுரத்தில் ஈசன் திருவடியில் ஒளிரச் சென்று விட்டது. ரவிவர்மாவின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum
Sivamayam

# Master Sitsabesan Ravivarma's Life History

Village of Kurumbasitty, through the all powerful grace of Sithi Vinayaga Perumal and the blessings of Muthumari Ambal, Pon Paramananda Maha Vidyalayam which produced to the world great scholars has lost all it's vigor and splendor today due to the pathetic situation and stands lost. Here lived the late teacher Subramaniam, and his wife Saraswathy also a teacher was born a son named Sitsabesan. He married Gunadevy loved daughter of late teacher and owner of Sakthy Power Looms Kathiravelu and his wife Sivasironmani was born Ravivarma.

Auvwayar's saying "Arithu Arithu Manidarathal Arithu", "Enniya Peravithanil Manida Peravithan yathinum Arithukaan" said by the Thayumanavar. "Manitha Peravium Venduwathe Im Manilathae" said by Appar Perumaan, "Mannilae Vantha Peraviyae Ennakku Valithaam Inbamam" said by Sundara Moorthy Suwami concided with Ravivarma as he began his life journey on the 21$^{st}$ of September 1995.

He had the privilage of loving Easwaridevi, Vimaladevi and Sakthidevi, the three great devi's as his periya amma's. The late Architect & Planner Sivapalan and Jayapalan were his Uncles. Narthana (Canada) was his Thalai maman's daughter and Tharnalini (Colombo) and Master Vithusan (Germany) were his non related brother & sister. Sumathy and Vakeesan were his mammi & Sithathappah from his father's side. After the continuos



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

demise of his uncle & aunty, grandfather and grandmother, Varma who actually should have born in Singapore had to be born in Colombo, Sri Lanka and through a lot of difficult situations spent his first year with his mother and mother's sister in Colombo. Later he continued his second year in Singapore. After spending his childhood life under the care and love of his mother's sister grew up to be a young lad.

He began his educational life in Singapore. He started his primary education at Yishun Northland Primary School and his Secondary at Bishan Kuo Chuan Presbyterian Secondary School and did well in his studies. Due to health conditions he could not continue his education in the school but through his will and liking of education and with the support of his dear parents and with the help of communication computer equipment studied and succeeded in his exams. He passed the London Cambridge Ordinary Level Examination. But he could not continue his higher education at the Singapore Inova Junior College due ill health and other constraints.

To fulfil his dream in life and to increase his educational attributes he came down to Colombo and enrolled at a private school and continued his education. Possibly due to his kind of illness his ambition was to be a Scientist and do medical research. He once again concentrated in Chemistry & Zoology. He did the London Cambridge Ordinary Level & succeeded in the same.

Support of his mother and the love of his mother's sister and his own aim and ambition incited him to apply for the Cambridge Advanced Level. But due to unexpected reasons he



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

had to leave this world with all his long standing dreams stand still. He earned a lot of friends and neighbours because of his openess and hospitality. He was very religious and God fearing and has visited very many religious sites such as Thiruketheeswaram, Thirukoneswaram, Naguleswaram in Sri Lanka and Panchapooda, Navakiraka sites, and Aarupadaiveedugal in India and prayed for his health.

May be he had a premonition of his end and therefore accompanied by his mother he visited his native land, grew up land, and also Asian, European countries like India, Malaysia, Germany, France, Norway and Canada & got to know his relatives & friends. He had aspecial place in the hearts of his friends and neighbour and all those who came in his life. He also made friends who were older than him and with his exceptional qualities & talents shared with them his knowledge in General Knowledge, Religion, Science, Medicine & Cookery etc.

Youngster Ravivarma an individual of love. Just and honest lived a short span of life on this earth and captured the hearts of many. As proper treatment for his illness was not green he went to his creator (Sivapatham) on the 29th of April 2015 leaving behind in deep sorrow his loving parents, periya annai, close brothers & sisters, friends relatives & neighbours.

May Ravivarma's soul rest in peace.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாய் இளஞ்சுடரே!

வையகத்து முழுநிலவும் பின்னொளிர்ந்திட்ட பகலவனும் பாரை
விட்டேகிவிட
எச்சபையு மேற்காது நிற்சபையாய் நின்ற பாவிமகனென்னை
கதிரவேலு தம்பதியின் இளையமகள் இசைந்து கரம்பற்றி
கருத்துடனே பெற்றெடுத்த தலைமகனே ரவிவர்மா.

தலைமக னுனைப்பெற்ற களிப்பினிலே தலை நிமிர்ந்து நின்றாள்
உன் தாய்
தன்சாத்திரம் மெய்ததென மெய்சிலிர்த்தாள் உனையீன்றவள் தாய்
உவகையுடன் எடுத்தணைத்து இறும்பூதெய்திய துன் பெரிய தாய்
தலைமாமன் இலையென்ற கவலைபோக்கிட நீயவனுருவில் வந்தவனே

வந்தவுன் வதனத்தில் வஞ்சமென்பது துளியுமில்லை
உள்ளத்தின் தூய்மையினால் ஊரெல்லாம் உறவுகொண்டாய்
ராமனாய் நட்புப்பெருக்கி பண்பிலே பரதனானவன் நீ
வாழ்நாள் குறிலெனினும் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவன் நீ

வாழ்ந்த வுனைக்காக்க தலைமாமன் இங்கிருக்கவில்லை
தந்தையாய் நானிருந்து என்கடன் செவ்வனவே செய்யவில்லை
தாயவள் துணையுடனும் பெரியன்னை வளர்ப்பாலும்
சுயம்புவாய் அறிவுபெற்று சுடரொளியாய் நின்றவன் நீ

நீகொண்ட கொடுநோயோ விதியின் விளையாட்டோ
தசரதனொப்ப தந்தைநான் பெற்ற சாபமிதோ
நிலைபெறா வாழ்விதென இளமைஞானம் கொண்டனையோ
இச்சபை விட்டு எங்குசென்றாய் இளஞ்சுடரே ரவிவர்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதரியின் உள்ளக்குமுறல்

நீ என்னை விட்டுப் போனஇடியில் இன்னும் மீளவில்லை,
கண்களில் ஈரம் இன்னும் வற்றவில்லை,
நெஞ்சினில் பாரம் இன்னும் குறையவில்லை,
நினைவெல்லாம் சோகம் இன்னும் தீரவில்லை,
கைகள் நடுங்க தமிழ் தடுமாற எப்படி நான்
உன் புகழ் எழுத முடியம்?

நீ பெற்றவர்க்கு ஒரே பிள்ளை
எம் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை
நீ விரும்பாதோர் யாருமில்லை
உன்னை விரும்பாதோர் எவருமில்லை
இவ்வுலகில் - நீ
சொத்தாய்ச் சேர்த்து வைத்த
சொந்தங்கள் கதிகலங்க
இருபது எட்ட முதல் - உன்
கனவுகளை நிறைவேற்றாது - நீ
சாதிக்கும் வயதினிலே பாதியில் போனதேனோ?
முத்துக்களில் முத்தான - என்
அன்புத் தம்பி வர்மாவே.................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நீயும்

நான் தனிமையில் பிறந்து தனிமையில் வாழ்ந்தேன். எனக்கென சொந்தம் யாருமில்லை என்று வாடியிருந்தேன். பதினாறு வருடங்களின் பின் எனக்கென இறைவன் அனுப்பிவைத்த சொந்தம் நீ. உன்னைக் கண்ட முதல்நாள் என் வாழ்நாளில் நான் அடைந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. கண்ணுக்குள் வைத்துக் காக்க வேண்டிய உன்னை இப்போ காணக்கூட வழியில்லாமல் தொலைத்து விட்டு தவிக்கிறேனே வர்மா...!

தம்பி விதுஷன், தங்கை நர்த்தனா (உனக்கு அக்கா) இன்னும் பல உறவுகள் இருந்தாலும் எனக்காக நீயும் உனக்காக நானும் வாழ்வதற்காகவே இறைவன் உன்னைப் படைத்தான். இறைவன் மிக நீண்ட நாட்களுக்கு பின் எனக்குக் கொடுத்த மகிழ்ச்சியைக் காலதேவன் பாதியில் பறித்துக் கொண்டான். நீ உன் வாழ்நாளை சிங்கப்பூரில் கழித்தாலும் என்னைப் பார்ப்பதற்காகவே அடிக்கடி என்னைத் தேடி தேடி வருவாய். என்னைப் பார்ப்பதற்காக தவமாய் இருப்பாய். என்னைக் கண்டதும் உலகமே உன் அருகில் இருப்பதாய் உணர்வாய், அவ்வளவு சந்தோஷம் உனக்கு. உன் சந்தோஷத்தைக் கண்டு நானும் பூரிப்படைவேன். நளினி அக்கா...... நளினி அக்கா........ என்று கூப்பிடும் ஒலி இன்னும் என் செவியில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இவையெல்லாம் இனி நான் எங்கே காண்பேன் வர்மா?

என் தாய்மாமனைத் தொலைத்தேன் அந்த வலி ஆற முன் அவரைப் போலவே உருவத்திலும் சரி, அறிவிலும் சரி, அணுகுமுறை யிலும் சரி எதுவாக இருந்தாலும் மாமனைப் போன்றே இருந்தாய். பண்பு, அடக்கம், அரவணைப்பு என்று எல்லாவற்றிலும் மாமனுக்கு நிகரானவன் நீ........... அவர் பெயர் சொல்லும் ஒருவன் நீ தான் என நாங்களும் அவரின் இழப்பில் இருந்து மீண்டோம் உன்னாலே. அன்று நம் மாமனைப் போன்று இன்று நீயும் பாதியிலேயே சென்று விட்டாயே வர்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் அம்மா (என் சித்தி) உன்னை தினமும் செல்லம் வா வா என்று அழைக்கின்ற ஒலி உன் செவிகளுக்கு எட்டவில்லையா வர்மா? உன் தந்தை (என் சித்தப்பா) இன்று ஊமையாகி வார்த்தைகள் அற்று திக்குத் தெரியாமல் இருக்கின்றார், உனக்குத் தெரிகின்றதா வர்மா? உன்னை வளர்த்த பெரியம்மா (என் சித்தி) மனமுடைந்து கதறுவது உனக்குக் கேட்கிறதா வர்மா? எத்தனைபேர் உனக்காக கதறுகின்றோம். எங்களைத் தவிக்கவிட்டு எங்கு சென்றாய்? ஏன் சென்றாய்?

உன் அறிவைப் பற்றி இங்கு சொல்லியே ஆகவேண்டும். இந்தச் சிறுவயதில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், இயந்திரவியல் உட்பட பல்வேறு துறைகளிலும் உன் அறிவை வளர்த்தது எப்படி? நீயே தனியாகத் தேடித் தேடி, தேடலில் கிடைத்த அறிவு இது. இந்த வயதில் இது எவ்வாறு சாத்தியமாகும் என நாங்கள் அனைவரும் உன்னைக் கண்டு வியந்தோம். இது மட்டுமல்லாது நீ ஒரு தமிழனாய் இந்துவாய் சைவ சமயத்தையும் விட்டு வைக்கவில்லை. இறுதியாகச் சமையல் கலையையும் நன்கு செய்யக் கற்றுக் கொண்டாய். இவ்வருடம் சித்தரை வருடப் பிறப்பிற்கு நீ செய்த பொங்கலே இறுதியானது. எங்கள் இல்லத்தில் மறுநாள் என்னை கைவிசேஷம் வாங்க வருமாறு என் வீடு தேடி வந்து அழைத்தாய், ஆனால் நானோ ஒரு பாவி உன்னை மருத்துவமனையில் அல்லவா கண்டேன்.

இறுதி நாள் உன்னை மருத்துவமனையில் பார்த்த அந்த நிமிடமே என் உயிர் என்னை விட்டுப் போனது. இது வரை நான் உன்னை அப்படிப் பார்த்ததில்லை, இதுவே முதல் முறை, அப்போதே என் சித்தி, உன் அம்மா கதறினார். ஐயோ என் அண்ணன் சிவபாலனை (என் தாய் மாமன்) இறுதியாக மருத்துவமனையில் பார்த்தது போல் இருக்கின்றாய் என்று......... இருந்தும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. மறுநாள் நீ என்னுடன் கதைத்தாய் உன் அம்மா உன் செவிகளில் சொன்னா நளினி அக்கா வந்து நிற்கின்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்வாள் என்று. "நளினி அக்கா" என்று சொன்னதும் உன் மனம் சிரித்ததை நான் அறிவேன். நானும் வர்மா வர்மா என அழைத்தேன். நீயும் ஓம் ஓம் என்றாய்...... வழமை போல் என்னுடன் கதைத்து முடியும் போது ஓகேயா........ ஓகேயா (Ohya Okya) என்று சொல்லுவாய். அதையும் நீ அந்த தருணத்தில் சொல்ல மறக்கவில்லை. என்னுடன் கதைத்த இறுதி சொல்லும் அதுவே.... நீ சொன்ன "ஓகேயா" (Okya) என்ற சொல்லே இன்னும் என் செவிகளில் ஒலிக்கின்றன.

என்னுடன் நீ கதைத்த சந்தோஷத்தில் நான் காரியாலயத்திற்குச் (Office) சென்றேன். அங்கு சிறிது நேரத்தில் என் அம்மாவின் தொலைபேசி அழைப்பு, 'அவசரமாய் ஓடிவா கெதியா' என்ற கதறலுடன் நானும் அழுதுகொண்டே விரைந்து வந்தேன். உன்னைப் பார்த்த அந்த நொடி 'வர்மா.... வர்மா....' என்று கத்தி அழைத்தேன். கதறி னேன், துடித்தேன்....... எழுந்து வா என்று உரக்கக் கூச்சலிட்டேன்.... உன்னுடன் போராடினேன்.... என் குரலைக் கேட்டாலே உனக்கு அவ்வளவு சந்தோஷம் என்று நானும் உன்னை கத்திக் கத்தி அழைத்தேன்.... என் மனதில் நீ எழுந்து வருவாய் என்ற நம்பிக்கை மட்டும் இருந்து கொண்டே இருந்தது... இறுதியில் நானும் சித்தப்பாவும் (உன் தந்தை) உன் அருகில் இருந்தோம். எனக்கு ஏதோ நீ காலையில் கண் விளிப்பாய் என்ற நம்பிக்கை...... ஆனால் மருத்துவர் வந்து நீ இவ்வுலகில் இல்லை என்பதை தலை அசைப்பால் வார்த்தைகள் வராது விக்கி விக்கி சொன்னார். அதைக் கேட்டு நான் துடித்தேன், கதறினேன். மருத்துவரிடம் போராடினேன்.... வாதாடினேன். இதயத் துடிப்பு இருப்பதாக சித்தப்பாவும் சொன்னார். உன்னை மறுபடியும் பார்க்கச் சொன்னோம், பரிசோதிக்கச் சொன்னோம். ஆனால் அவர் மறுத்து விட்டார். எதுவும் பயனளிக்க வில்லை என்று சொல்லி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவா... இறைவா என்று விடிய விடிய இறைவனையே நாடினாய் ஆதலால் தான் என்னவோ இறைவனுக்கு உன்னை மிகவும் பிடித்துப் போயிற்று. இவ்வுலகில் உன்னைக் கஷ்டப்படுத்தாது தன்னுடனே அழைத்துச் சென்றுவிட்டான்.

வர்மா... வர்மா.... என்று சொந்தங்கள் கதறுகின்றோம். செல்லம் செல்லம் என்று பெற்றோர்கள் புலம்புகின்றனர். நண்பர்கள் செய்வதறியாது திகைத்துப் போயின. எல்லோரும் உன் செய்தி கேட்டு விறைத்துப் போயினர். ஆனால் நான் மட்டும் உன் வரவுக்காகக் காத்திருக்கின்றேன் வர்மா.

உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நீ மீண்டும் வருவாய், இவ்வுலகை ஆள்வாய் என்றும் உன் அனைத்துக் கனவுகளும் நிறைவேறும் என்றும் உறுதியுடன்

**உன் வரவுக்காகக் காத்திருக்கும்**
**உன் அன்புச் சகோதரி**
**நளினி அக்கா**
**பெரிய பெரியம்மா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய தீபமானவனே...

அவசரமாய் வந்தது தொலைபேசி அழைப்பு
அவசரமான சேவைப் பிரிவில்
அவசரமாக உன்னைச் சேர்த்த செய்தி கேட்டு
அவசரமாக பயண ஒழுங்குகள் செய்தேன்.

உன் திருமுகம் பார்க்க ஓடி ஓடி வந்தேன்
இடி இடித்தது போல் செய்தி துடியாய் துடித்தேன் ஐயா!
கனத்த நெஞ்சத்துடன் கணமும் துடித்தேன்
நினைத்து நினைத்து ஏங்குகிறேன் வர்மா!

இளமைத் துடிப்போடு துள்ளித் திரிந்த இனியவனே
கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளம் கொண்டவனே
கண்ணிமைப் பொழுதில் காணாமற் போதவற்கு
எங்கிருந்து வந்ததையா இந்தவிதி உன்னருகே
அத்தனையும் துறந்து எப்படித்தான் போனாயோ?
ஊரே திரண்டுவந்து உன் புகழ் பேசக்கேட்போம்
உயிரோடு இல்லையே நீ ஐயா!

உள்ளம் பதைக்குதையா உருக்குலைந்து உருகுதையா
கள்ளமில்லா வுந்தனையா காலனவன் அணுகவேண்டும்
வெள்ளெருக்கம் சடையான் வேண்டு மென்று அழைத்திருப்பின்
வள்ளலுனை மீண்டுமவன் எங்களுக்குத் தரவேண்டும்
புன்னகை தவழும் உன் முகத்தை நாம் எங்கு காண்போம்
நீ எங்கு சென்று மறைந்திடினும் இம்மண்ணிலே
நாம் உள்ளவரை எம் நெஞ்சில் நீ வாழ்ந்திருப்பாயே!
இறைமடியில் நித்திய பேரின்ப பெருவாழ்வு வாழ்வாயாக!

**சக்தி பெரியம்மா, சங்கர் பெரியப்பா, விதுஷன்**
**ஜெர்மனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடம்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்,
கருணை பூக்கவும், தீமையைக் காய்க்கவும்,
பருவ மாய்நமது உள்ளம் பழுக்கவும்,
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுமாம்.

தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும் பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில வீரட்டா னத்துறை யம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய் இனி அல்லேனென லாமே.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உண்ணாமலை யுமையாளொடு முடனாகியவொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரனண் மழலைம்முழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணமறுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம் நீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உந் நாமம் எந்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையில் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத் துறை அம்மானே.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்.

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

நீள நினைந்தடியேன் உமை நித்திலுங் கைதொழுவேன்
வாளன கண்டமடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

இடரினுந் தளரினும் எனது றுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழு வேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

பால் நினைந்து ஊட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி, உள்ஒளி பெருக்கி,
உலப்பிலா ஆனந்த ஆய,
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே ! சிவபெரு மானே !
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே?

# திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக்கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண் டுள்ளம்
குளிர வென்கண்கள் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக்குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவருள்
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத் தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரிய விரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப் புயல் மெச்சத் தகு பொருள்
பட்சத் தொடு சட்ஷித் தருள்வது மொருநாளே
தித்தித் தெய வொத்தப் பரிபுர
நிமிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்கத் தொகு தொகு
சித்ரப் பவுரிக்குத் திரிகடக எனவோதக்
கொத்துப் பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றொரு நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவெல பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும் பற்றியே மாதிரிப் புகழ்பாடி
முத்தனாமாறெனைப்பெருவாழ்வை முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா வெற்றி வேலாயுதப் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத விந்து கலாதீ நமோ நம
வேத மந்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித சாமி நமோநம - வெகுகோடி
நாம சம்பு குமாரா நமோ நம
போக அந்தரி பாலா நமோ நம
நாக பந்த - மயூரா நமோ நம - பரசூர்
சேத தண்ட விநோதா நமோ நம
கீத கிங்கிணி பாதா நமோ நம
தீர சம் ப்ரம வீரா நமோ நம - கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோ நம - அருள் தாராய்
ஈதலும் பல கோலால பூஜையும்
ஓது லுங் பண ஆசார நீதியும்
ஈரமுங் குரு சீர்பாத சேவையும் - மறவாத
ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பீர நாடாளு நாயக - வயலூரா
ஆதரம் பயிலாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மா கயி - லையி லேகி
ஆதியந்த வுலா வாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நன்னாடத்தில்
ஆவிநன் புடி வாழ்வான தேவர்கள் - பெருமாளே

பாதி மதிநதி போது மணிசடை நாத ரருளிய - குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள் பாதம் வருடிய - மணவாளா
காது மொருவிழி காக முற அருள் மாய னரிதிரு - மருகோனே
கால னெனையது காம லுனதிரு காலில் வழிபட - அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல காளும் வகையுறு - சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள் சூழ வலம்வரு -மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு வாமி மலைதனி -லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட வேலை விடவல - பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைசெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுரு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகுமு ரேசத் திறலோனெ
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறையறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தைவழி உறவு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாய்வழி உறவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையும் மகனும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் சேயும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன்மார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியம்மாவுடன்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய பெரியம்மாவுடன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திப் பெரியம்மாவுடன்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிறந்த தின கொண்டாட்டங்கள்












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைப் பருவத்தில்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைப் பிராயத்திலே










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கூடத்திலே










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயலவர் நண்பர்களுடன்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமைக் கனவுகளுடன்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன சன பந்தங்களுடன்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமகனும் சகோதரியும்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனயனும் தம்பியும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்நாட்டு பயணங்களில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்நாட்டு பயணங்களில்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நளபாகத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையிலே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

(காப்பு)

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடி வாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யா தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாத இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் மளவுறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பாய் யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

****

செய்ய முடியும் என்று நம்பு. ஒன்றை செய்ய முடியும் என்று நீ முழுதாய் நம்பும் போது, உன் மனம் அதை செய்து முடிக்கும் வழிகளைக் கண்டறியும். ஒரு காரியத்தில் வைக்கும் நம்பிக்கை, அந்தக் காரியத்தை முடிக்கும் வழியையும் காட்டுகிறது. - Dr. David Schwartz

வெற்றியாளர்கள் முடிவுகளை விரைவில் எடுக்கிறார்கள். அப்படி எடுத்த முடிவுகளை மிக மெதுவாகவே மாற்றுகிறார்கள். தோல்வியுறுபவர்களோ முடிவுகளை மிக மெதுவாகவே எடுக்கிறார்கள். அப்படி எடுத்த முடிவுகளை அடிக்கடியும், மிக விரைவாகவும் மாற்றுகிறார்கள். - Napoleon Hill

சுறுசுறுப்புடன் எல்லாவற்றையும் செய்கிறவனுக்கு, எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்.
~ எமர்சன்

சுறுசுறுப்பாய் உள்ள மனிதன் எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பான்.
~ ஹென்றிபோர்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபடை வீடுகளின்

# கந்தசஷ்டி கவசம்

(பாலன் தேவராய சுவாமிகள் அருளியது)

## முதலாவது கவசம்

### திருப்பரங்குன்றுறை தீரன்

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கை கூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நூல்

திருப்பரங் குன்றுறை தீரனே! குகனே!
மருப்பிலாப் பொருளே வள்ளி மனோகரா
குறுக்குத் துறையுறை குமரனே! அரனே
இருக்கும் குருபரா! ஏரகப் பொருளே!
வையா புரியில் மகிழ்ந்துவாழ் பவனே!
ஒய்யார மயில்மேல் உகந்தாய் நமோ நமோ,
ஐயா! குமரா! அருளே நமோ நமோ,
மெய்யாய் விளங்கும் வேலா! நமோ நமோ,
பழனியங் கிரிவாழ் பகவா! நமோ நமோ,
மழுவுடை முதல்வன் மதலாய்! நமோ நமோ,
விராலி மலையுறை விமலா நமோ நாமோ,
மராமரம் துளைத்தோன் மருகா நமோ நமோ
சூரசங் கார துரையே நமோ நமோ
வீரவே லேந்தும் வேளே நமோ நமோ
பன்னிரு கரமுடைப் பரமா நமோ நமோ
கண்களீ ராறுடைக் கந்தா நமோ நமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக்கொடியுடைக் கோவே நமோ நமோ
ஆழிசூழ் செந்தில் அமர்ந்தாய் நமோ நமோ
சசச சசச ஓம் ரீம்
ரரர ரரர ரீம்
வவவ வவவ ஆம் ஹோம்
ணணண ணணண வாம் ஹோம்
பபப பபப சாம் சூம்
வவவ வவவ வெளம் ஓம்
லல லிலி லுலு நாட்டிய அட்சரம்
கக கக கக கந்தனே வருக
இக இக இக ஈசனே வருக
தக தக தக சற்குரு வருக
பக பக பக பரந்தாமா வருக
வருக வருகவென் வள்ளலே வருக
வருக வருகநிஷ் களங்கனே வருக
தாயென நின்னிரு தாள் பணிந்தேன் எனைச்
சேயெனக் காத்தருள் திவ்யமா முகனே
அல்லும் பகலும் அனுதினம் என்னை
எல்லிலும் இருட்டிலும் எரிபகல் படுக்கை
வல்ல விடங்கள் வராமல் தடுத்து
நல்ல மனத்துடன் ஞான குருஉனை
வணங்கித் துதிக்க மகிழ்ந்துநீ வரங்கள்
இணங்கியே அருள்வாய் இறைவா எப்போதும்
கந்தா கடம்பா கார்த்திகேயா
நந்தன் மருகா நாரணி சேயே
எண்ணிலாக் கிரியில் இருந்து வளர்ந்தனை
தண்ணளி அளிக்கும் சாமிநாதா
சிவகிரி கயிலை திருப்பதி வேளூர்
தவக்கதிர் காமம் சார்திரு வேரகம்
கண்ணுள் மணிபோல் கருதிடும் வயலூர்
விண்ணவர் ஏத்தும் விராலி மலைமுதல்
தன்னிக ரில்லாத் தலங்களைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னிதி யாய்வளர் சரவண பவனே
அகத்திய முனிவனுக்(கு) அன்புடன் தமிழைச்
செகத்தோர் அறியச் செப்பிய கோவே
சித்துகள் ஆடும் சிதம்பர சக்கரம்
நர்த்தனம் புரியும் நாற்பத்தெண் கோணம்
வித்தாய் நின்ற மெய்ப் பொரு ளோனே
உத்தம குணத்தாய் உம்பர்கள் ஏறே
வெற்றிக் கொடியுடை வேளே போற்றி
பக்திசெய் தேவர் பயனே போற்றி
சித்தம் மகிழ்ந்திடச் செய்தவோ போற்றி
அத்தன் அரியயன் அம்பிகை லட்சுமி
வாணி யுடனே வரையுமாகக் கலைகளும்
தானே நானென்று சண்முக மாகத்
தாரணி யுள்ளோர் சகலரும் போற்றப்
பூரண கிருபை புரிபவா போற்றி
பூதலத் துள்ள புண்ணிய தீர்த் தங்கள்
ஓதமார் கடல்சூழ் ஒளிர்புவி கிரிகளில்
எண்ணிலாத் தலங்கள் இனிதெழுந் தருள்வாய்
பண்ணும் நிட்டைகள் பலபல வெல்லாம்
கள்வம் அபசாரம் கர்த்தனே எல்லாம்
எள்ளினுள் எண்ணய்போல் எழிலுடை உன்னை
அல்லும் பகலும் ஆசாரத்துடன்
சல்லாப மாய் உன்னைத் தானுறச் செய்தால்
எல்லா வல்லமை இமைப்பினில் அருளி
பல்லா யிரநூல் பகர்ந்தருள் வாயே
செந்தில் நகர்உறை தெய்வானை வள்ளி
சந்ததம் மகிழும் தயாபர குகனே
அரன் மகிழ் புதல்வா ஆறுமுகாசரணம்
சரணம் சரணம் சரவண சரவண பவஓம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது கவசம்

## திருச்சீரலைவாய்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிர்ஐயுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன் தினம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணை முழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோ தனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வஜ்ரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனகபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடணங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கு செக்கு செதில் செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல துவாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்வி புரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா! அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவினன்குடி வாழ் அழகிய வேலா!
செந்தின்மாமலை யுறும் செங்கல்வ ராயா!
சமராபுரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யான் னுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனையடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம ளித்து
மைந்தனென் மீதுன் மனம்மகிழ்ந் தருளித்
தஞ்சம்மென்றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர்சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந்துலங்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர்சஷ்டி கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் அருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாவாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்குரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து ணவாகச்
சூரபத்மாவைத் துணிந்த கை யதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந் தமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகாபோற்றி!
இடும்பாயுதனே இடும்பாபோற்றி!
கடம்பாபோற்றி கந்தாபோற்றி!
வெற்றி புனையும் வேலே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம் !
சரணம் சரணம் சண்முகா சரணம்!

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது கவசம்

## திருவாவினன்குடி

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தைவே லாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைபங் காளா
பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டாயிரம் வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத்துடனே பராசக்தி வேலதாய்
வீர வாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் காரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனகசிம் மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக்(கு) அருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற் றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நலமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக் குதவா
திருவரு ணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத் தெட்டாம் அருள்சிவ தலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உருப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்
கருதிமெய் யோகம் சொல்லிய(து) ஒரு முகம்
அருள்பெரு மயில்மீ(து) அமர்ந்தது ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவிய(து) ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்ப(து) ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அறுமறை யடியார்
தானவர் வேண்டுவ தருவ(து) ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட் செந்தில் அம்பதி புரப்பாய் நமோ நம
ஏரகம் தனில்வாழ் இறைவா நமோ நம
கூரகம் ஆவினன் குடியாய் நமோ நம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ நம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோ நம
எல்லா கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருளி
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத்தெழும் ஜோதியை
சர்வ முக்கோணத் தந்தமுச் சத்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு வேத்தி
நாற்கோ ணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்(து) அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை
தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தில் வாசியைக் காட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாவர்
சாகா வகையும் தன்மை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
விந்தை உமைசிவன் மேன்மையும் காட்டி
சந்திர சூரியன் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்(டு) அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறு முகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன் விளையாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரைதிரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்த படியென் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் லட்சணத் துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்(து) ஆறு முகமும்
மாறா திருக்கும் வடிவையும் காட்டிக்
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்க
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன் னே வந்து
அஷ்டாவ தானம் அறிந்துடன் சொல்லத்
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்
இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கக்
துலக்கிய காவியம் சொற்பிர பந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பல ங்காரம்
வாழ்த்தும் என் நாவில் வந்துனி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்க்கும் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசனெ
வச்சிரம் சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்கு உதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்லஉன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தனக்கெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கயபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துர்க்கை பிடாரி நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொறுக்கிச்
சூலத்தாற் குத்தித் தூளுதூ ளுருவி
வேலா யுதத்தால் வீசிப்பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய்த் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினிச் சக்கரம்
சண்முக சக்கரம் தண்டாயுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்
ஏகரூபமாய் என்முன்னே நின்று
வாகனத் துடன் என்மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயிர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே சபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் ஏதுவேண்டியதும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்தம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்காரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காவது கவசம்

## சுவாமிமலை

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைத் துண்ட துண்டங்களாய்
வேலா யுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான்மரு கோனேவள்ளி மணாளனே
நானெனும் ஆண்மை நண்ணிடா(து) என்னைக்
காணநீ வந்து காப்பதுன் கடனே
காளிகூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி
போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
ஏகாட் சரமாய் எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைந்தவா போற்றி
திரியாட் சரத்தால் சிவன் அயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மை யற்றவனே
சதுரட் சரத்தால் சாற்றுதல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவதாய்த்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தனே
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறு கோணமாய் ஆறெழுத் தாகி
ஆறு சிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவனை வந்த சடாட்சரப் பொருளே
அரனயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும்ஆ யுதத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரங்குலைத்(து) ஓடத் தாராக சுரன்முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்ந்தோய்
சீர்திருச் செந்தூர்த் தேவதேச னாதிப
அஸ்ட குலாசலம் யாவையும் ஆகி
இஸ்டசித் திகளருள் ஈசன் புதல்வா
துட்டசம் காரா சுப்பிர மண்யா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தைவமாய் விளக்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்தநல் யோகம்
இரவலர்க்(கு) அருளும் ஈசா போற்றி
ஏதுசெய் திடினும் என்பால் இரங்கிக்
கோதுகள் இல்லாக் குணமெனக் கருளித்
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்கரம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாய்ப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோ(டு) னென்னைச்
சல்லாப மாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் கண்டிபே தாளம்
சண்டமா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சோக்கலும் சயமும்
மூல ரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வ சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீறிடக்
கன்னலோன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயகனே
தெய்வ நாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாவது கவசம்

## திருத்தணிகை

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளி மயிலேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூல
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நலியும் சராபன்றி மலையும்
பண்முக நிறைந்த பழநிக்கு இறைவா
ஆறாது நூற்று அட்டமங் களமும்
வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த சிந்தூரமும்
திருவெண்ணீ றணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப்பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்குபல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப் பரிந்த கபோலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கம் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈசுவரன் பார்வதி எடுத்து முத்தாடி
ஈசுவரன் வடிவை மிகக்கண் டனுதினம்
கையால் எடுத்துக்கனமார்(பு) அணைத்தே
ஐயா! குமரா! அப்பனே! என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்தி கேயாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா! வருகவென்(று)
அந்நேரம் வட்டமிட்ட டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக
கூவிய சேவற் கொடியாய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணைப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலக்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
சிவகிரி மீதினில் திருநிறை கொலுவும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர காந்தச் சரிகைத் தொங்கலும்
மந்திர வாழும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒருகோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமுடி அணியுமா பரணமும்
வாயில் நல்மொழியாய் வழங்கியசொல்லும்
நாபிக் கமலம் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புழுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர்கத் தூரியும்
வல்லிபுரிச் சங்கொலி மணியணி மிடறும்
நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
ஆணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நவவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சகராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயும்
ஒருகை சந்திராயும் ஒருகை வல்லாயும்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழை பங்காளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் முனிவர் மகிழ்ந்து கொண்டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவமாட
அஷ்ட பயிரவர் ஆனந்தமாடத்
துஷ்ட மிகுஞ்சூழிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னச்
சித்தர்கள் நின்று சிவசிவா என்னத்
தும்புரு நாரதர் சூரிய சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ததார ரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆலத்தி எடுக்க
தேவ கணங்கள் செயசெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசிக்
சார்ந்தனம் என்ன சார்வரும் அனேக
பூதம் அடிபணிந் தேத்த வேதாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்துகொண் டாட
அரகர என்றடியர் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்கக்
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடை விடாமல்உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேந்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளத் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ முசரடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியுஞ் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனஞ் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீர மயிலேறி வெற்றிவேல் எடுத்துச்
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்கமுகா சூரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குழந்தை அறுத்துச் சயித்து
விடவே லாயுதம் வீசிக் கொக்கரித்துத்
தம்ப மெனும்சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினங் காத்துத்
திருப்பரங் குன்றஞ் சீர்ப்பதி செந்தூர்
திரவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மணியன்
மெய்யாய் விளங்கும் விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள்மேவுங் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிமை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனதிலும்
கதிர்காமம் செங்கோடு கதிர்வேங் கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்குந் தானவ னாயிருந்(து) அடியர்தம்
பங்கி லிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்ட முடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய்எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவது கவசம்

## பழமுதிர்சோலை

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவண பவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திரிபுர பவனே தேவதேச னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமிவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் ணவ்வுமாய் பழமுதிர் சோலையில்
தவ்விய ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வாய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் குழவியாய் சென்றங்(கு)
அஞ்சலி செய்தவள் அமுதம் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடைய வீரவாகுவோ(டு) ஒன்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்பிமா ராகத் தானையைக் கொண்ட
சப்பிர தாயா சண்முக வேலா
நவவீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ்வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை
அமரர்கள் எல்லாம் அதிசயப்படவே
மமதையாய் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலை மகளுடனே
அறுவரோர் அம்சமாம் அரக்கரை வெல்ல
ஆறுமுகத்துடன் அவதரித் தோனே
சிங்கமுகா சுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியராக் கதரை
வேருடன் கெல்லி விண்ணவர் துன்பம்
ஆறிடச் செய்தவ வமர்கள் தமக்குச்
சேனா பதியாய்த் தெய்வீக பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழைபங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) ஏனையாள் கார்த்திகேயாஎன்
கடநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்ட லட்சுமிவாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்
திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருண கிரிதனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டி கவசந் தான்செபிப்போரைச்
சிட்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சந்தத் தமிழ்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ் தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்து
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றேற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்மென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

உடல் கூற்று வண்ணம்

குழிப்புச்சந்தம்

தன தன தான தன தன தான
தந்த தனந்தன தந்த னந்த
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த
தந்ததன தான தன தானனா

ஒருமட மாது மொருவனு மாகி
இன்பசு கந்தரு மன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகிய விந்து
உறுசு ரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கபடமி தென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைக ளென்ற
உருவமு மாகி வுயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்று நிறைந்து மடந்தை
உதரம கன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும றிந்து
மகளிர்கள் சேனை தரவணை யாடை
மண்டப வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
ஓரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகை யூற லிதழ்மட வாரு
வந்துமு கந்திட வந்துக வழ்ந்து
மடியி லிருந்த மழலைமொ ழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப
உடைமணி யாடை யரைவட மாட
உண்பவர் தழன்பவர் தங்களொ டுண்டு
தெருவிலி ருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரொ டோடிந டந்து

- அஞ்சுவய தாகி விளையாடியே, 1/4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரு ஞான குருவுப தேச
முந்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும்வி ளம்ப
வாழ்பதி னாறு பிராயமும்வந்து
மயிர்முடி கோதழ யறுபத நீல
வண்டமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொனி லங்கு பணிகள ணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க
மதனசொ ரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழியவெ றிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனதுபொ றாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவம யங்கி இதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுதலாகிய முதுபொரு ளாயி
ருந்தத னங்களும் வம்பிலி ழந்து
மதனசு கந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு விரிந்து
வளமையு மாறி யிளமையு மாறி
வன்பல விழுந்திரு கண்களி ருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவி ரோதகு ரோதம டைந்து

- செங்கையினி லோர்த டியுமாகியே, 1/2

வருவது போவ தொருமுது கூனு
மந்தியெ னும்படி குந்தி நடந்து
மதியும ழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல்பொ றாது
தொண்டையு நெஞ்சு முலந்து வறண்டு
துகிலுமி ழந்து சுணையும ழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவுமி ராமல் உரைதடு மாறி,
சிந்தையு நெஞ்சமு லைந்து மருண்டு
திடமுமு லைந்து மிகவும லைந்து
தேறிந லாதர வேதென நொந்து
மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்ட மினியென தொந்த
மேதினி வாழ்வுநி லாதினி நின்ற
கடன்முறை பேசு மெனவுரை நாவு
றங்கிவி முந்துகை கொண்டுமொ ழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமு நாலு சுவாசமு நின்று

- நெஞ்சுதடு மாறி வருநேரமே 3/

வளர்பிறை போல எயிறுமு ரோம
முஞ்சடை யுஞ்சிறு குஞ்சியும் விஞ்ச
மனதுமி ருண்ட வடிவுமி லங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில்வி முந்து மனைவிபு லம்ப
மாழ்கின ரேயிவர் காலம றிந்து
பழையவர் காணு மெனுமய லார்கள்
பஞ்சுப றந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியு மென்று
பலரையு மேவி முதியவர் தாமி
ருந்தச வங்கமு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களபம ணிந்து
பாவக மேசெய்து நாறுமு டம்பை
வரிசைகெ டாம லெடுமென வோடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகிந டந்து சுடலைய டைந்து
மானிட வாழ்வென வாழ்வை நொந்து
விறகிடை மூடி யழல்கொடு போட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்துவி ழுந்து முறிந்துநி ணங்கள்
உருகியெலும்பு கருகிய டங்கி
ஓர்பிடி நீறுமி லாதவு டம்பை
- நம்புமடி யெனை யினியாளுமே! 1

**தாயாருக்குத் தகனக்கிரியை செய்கையிற்பாடியது**

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி!

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டெனைக் காப்பாற்றுங் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்?

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - 'உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே!' என அழைத்த வாய்க்கு?

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி, என்றன்
மகனே! என அழைத்த வாய்க்கு?

**கலி விருத்தம்**

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூழ்க மூழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

### கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே.

### நூல்

அறஞ் செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
எண் எழுத்து இகழேல்
ஏற்பது இகழ்ச்சி
ஐயம் இட்டு உண்
ஒப்புரவு ஒழுகு
ஓதுவது ஒழியேல்
ஔவியம் பேசேல்
அஃகஞ் சுருக்கேல்
கண்டு என்று சொல்லேல்
ஙப் போல் வளை
சனி நீராடு
ஞயம்பட உரை
இடம் பட வீடு எடேல்
இணக்கம் அறிந்து இணங்கு
தந்தை தாய் பேண்
நன்றி மறவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தே பயிர் செய்
மண் பறித்து உண்ணேல்
இயல்பு அலாதன செயேல்
அரவம் ஆடேல்
இலவம் பஞ்சில் துயில்
வஞ்சகம் பேசேல்
அழகு அலாதன செயேல்
இளமையில் கல்
அரனை மறவேல்
அனந்தல் ஆடேல்
கடிவது மற
காப்பது விரதம்
கிழமைப் பட வாழ்
கீழ்மை அகற்று
குணமது கைவிடேல்
கூடிப் பிரியேல்
கெடுப்பது ஒழி
கேள்வி முயல்
கைவினை கரவேல்
கொள்ளை விரும்பேல்
கோதாட்டு ஒழி
சக்கர நெறி நில்
சான்றோர் இனத்திரு
சித்திரம் பேசேல்
சீர்மை மறவேல்
சுளிக்கச் சொல்லேல்
சூது விரும்பேல்
செய்வன திருந்தச் செய்
சேரிடம் அறிந்து சேர்
சை எனத் திரியேல்
சொல் சோர்வு படேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பித் திரியேல்
தக்கோன் எனத் திரி
தானமது விரும்பு
திருமாலுக்கு அடிமை செய்
தீவினை அகற்று
துன்பத்திற்கு இடம் கொடேல்
தூக்கி வினை செய்
தெய்வம் இகழேல்
தேசத்தோடு ஒத்து வாழ்
தையல் சொல் கேளேல்
தொன்மை மறவேல்
தோற்பன தொடரேல்
நன்மை கடைப்பிடி
நாடு ஒப்பன செய்
நிலையில் பிரியேல்
நீர் விளையாடேல்
நுண்மை நுகரேல்
நூல் பல கல்
நெல் பயிர் விளை
நேர் பட ஒழுகு
நைவினை நணுகேல்
நொய்ய உரையேல்
நோய்க்கு இடம் கொடேல்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பிழைபடச் சொல்லேல்
பீடு பெற நில்
புகழ்ந்தாரைப் போற்றி வாழ்
பூமி திருத்தி உண்
பெரியாரைத் துணைக் கொள்
பேதைமை அகற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையலோடு இணங்கேல்
பொருள்தனைப் போற்றி வாழ்
போர்த் தொழில் புரியேல்
மனம் தடுமாறேல்
மாற்றானுக்கு இடம் கொடேல்
மிகைபடச் சொல்லேல்
மீதூண் விரும்பேல்
முனைமுகத்து நில்லேல்
மூர்க்கரோடு இணங்கேல்
மெல்லி நல்லாள் தோள் சேர்
மேன் மக்கள் சொல் கேள்
மை விழியார் மனை அகல்
மொழிவது அற மொழி
மோகத்தை முனி
வல்லமை பேசேல்
வாது முற்கூறேல்
வித்தை விரும்பு
வீடு பெற நில்
உத்தமனாய் இரு
ஊருடன் கூடி வாழ்
வெட்டெனப் பேசேல்
வேண்டி வினை செய்யேல்
வைகறைத் துயில் எழு
ஒன்னாரைத் தேறேல்
ஓரம் சொல்லேல்.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

### கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

### நூல்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல் அறம் அல்லது நல் அறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவனைப்பற்றி ஓரகத்திரு
ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
அஃகமும் காசும் சிக்கனத் தேடு
கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை
காவல்தானே பாவையர்க்கு அழகு
கிட்டாதாயின் வெட்டென மற
கீழோ ராயினும் தாழ உரை
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி
கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு
சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவம் மறந்தால் கைத்தவம் ஆளும்
சேமம் புகினும் யாமத்து உறங்கு
சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்
சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
தாயிற் சிறந்த கோயிலு மில்லை
திரை கடல் ஓடியும் திரவியம் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வம் சீறின் கைதவம் மாளும்
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
தோழனோடும் ஏழைமை பேசேல்
நல் இணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொல் திறம்பாவை
நீரகம் பொருந்திய ஊரகத்திரு
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
நூன் முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகம் இல்லை
நேரா நோன்பு சீரா காது
நைபவர் எனினும் நொய்ய உரையேல்
நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர்
நோன்பு என்பது கொன்று தின்னாமை
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்
பிறன்மனை புகாமை அறம் எனத் தகும்
பீரம் பேணில் பாரந் தாங்கும்
புலையும் கொலையும் களவும் தவிர்
பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்
பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்
போனகம் என்பது தான் உழந்து உண்டல்
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
மாரி அல்லது காரியம் இல்லை
மின்னுக்கு எல்லாம் பின்னுக்கும் மழை
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
மேழிச் செல்வம் கோழை படாது
மை விழியார் தம் மனை அகன்று ஒழுகு
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
மோனம் என்பது ஞான வரம்பு
வளவன் ஆயினும் அளவு அறிந்து அளித்து உண்
வானம் சுருங்கின் தானம் சுருங்கும்
விருந்தில்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
வீரன் கேண்மை கூர் அம்பாகும்
உரவோர் என்கை இரவாது இருத்தல்
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு
வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை
வைகல் தோறும் தெய்வம் தொழு
ஒத்த இடத்து நித்திரை கொள்
ஓதாதார்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துக் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## நூல்

புண்ணியம் ஆம் பாவம்போம் போனநாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் - எண்ணும்கால்
ஈதுஒழிய வேறுஇல்லை எச்சமயத்தார் சொல்லும்
தீதுஒழிய நன்மை செயல். 1

சாதி இரண்டுஒழிய வேறு இல்லை: சாற்றும்கால்
நீதிவழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி. 2

இடும்பைக்கு இடும்பை இயல்உடம்பு இதுஅன்றே
இடும்பொய்யை மெய்என்று இராதே - இடும்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு. 3

எண்ணி ஒருகருமம் யார்க்கும் செய்யஒண்ணாது
புண்ணியம் வந்துஎய்த போதல்லால் - கண்ணில்லான்
மாங்காய் விழஎறிந்த மாத்திரைக்கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு. 4

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால்போகா - இருந்து ஏங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைத்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது ஒழிய ஒருவருக்கு ஒருவர்சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில் - வெள்ளக்
கடல்ஓடி மீண்டு கரையேறி னால்என்
உடலோடு வாழும் உயிர்க்கு. 6

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆம்கமல நீர்போல்
பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு. 7

ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். 8

ஆற்றுப்பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து. 9

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் - வேண்டா
"நமக்கும் அதுவழியே நாம் போம் அளவும்
எமக்கு என்" இட்டுஉண்டு இரும். 10

ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்
'இருநாளுக்கு ஏல்' என்றால் ஏலாய் - ஒருநாளும்
என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிற்றே
உன்னோடு வாழ்தல் அரிது. 11

ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும்விழும் அன்றே - ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்புஇல்லைக் கண்டீர்
பழுதுஉண்டு வேறுஓர் பணிக்கு. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாரை யாரே அழிப்பார்? அதுஅன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர் - ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய்அம் புவிஅதன் மேல். 13

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சை பலசொல்லி இடித்துஉண்கை - சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும். 14

சிவாய நமஎன்று சிந்தித்து இருப்போர்க்(கு)
அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
அதுவே; மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும். 15

தண்ணீர் நிலநலத்தால் தக்கோர் குணம் கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்புஅழியா ஆற்றால்; கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. 16

செய்தீ வினைஇருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்? - வையத்து
அறும்பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்? 17

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம். 18

சேவித்தும் சென்று இரந்தும் தெண்நீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் - போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம். 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்
கொம்மை முலைபகர்வார் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி
வறுமைக்கும் வித்தாய் விடும். 20

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெல் கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். 21

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்! கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போயினபின்பு யாரோ அநுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்? 22

வேதாளம் சேருமே வெள் எருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை. 23

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டிபாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறில்
உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே
மடக் கொடி இல்லா மனை. 24

ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 25

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம். 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அது வரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 27

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். 28

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்
கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 29

தாம்தாம் முன்செய்த வினைதாமே அநுபவிப்பார்
பூந்தாமரையோன் பொறி வழியே - வேந்தே
ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி. 30

இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று - வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தின் நன்று தனி. 31

ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
தண்ணீரும் வாரும்: தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 32

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசு மரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லானே ஆனாலும் கைப் பொருள் ஒன்று உண்டாயின்
எலலாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல். 34

பூவாதே காய்க்கும் மரமும் உள மக்கள் உளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு. 35

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்டகரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி
போதம் தனம்கல்வி போன்றவரும் காலம் அயல்
மாதர்மேல் வைப்பார் மனம். 36

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பது எனக்
கண்ணுறுவது அல்லால் கவலைப்படேல் நெஞ்சே மெய்
விண்ணுறுவார்க்கு இல்லை விதி. 37

நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்
அன்று என்றும் ஆம்என்றும் ஆகாதே - நின்றநிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள். 38

முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை
தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செப்பும்
கலைஅளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகுமாம் மூப்பு. 39

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் என்று உணர். 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னெறி

## கடவுள் வாழ்த்து

மின்னெறி சடாமுடி விநாயகன் அடி தொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே

என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீது அற்றோர் - துன்று சுவை
பூவின் பொலி குழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிது என்க - ஈசற்கு
நல்லோன் எறி சிலையோ நன்னுதால் ஒண்கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு

தங்கட்கு உதவிலர் கைத்தாம் ஒன்று கொள்ளின் அவர்
தங்கட்கு உரியவரால் தாம் கொள்ன - தங்க நெடும்
குன்றினால் செய்தனைய கொங்கையாய் ஆவின் பால்
கன்றினால் கொள்ப கறந்து

பிறர்க்கு உதவி செய்யார் பெரும் செல்வம் வேறு
பிறர்க்கு உதவியார்க்குபவர் பேறாம் - பிறர்க்கு உதவி
செய்யாக் கருங்கடல் நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு

நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நோய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமை போல்
புல்லினும் திண்மை நிலை போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே - ஒரு கலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என் முகத்தாய் நோக்கல் தான்
கண் இரண்டும் ஒன்றையே காண்

கடலே அனையம் யாம் கல்வியால் என்னும்
அடலேறு அனைய செருக்கு ஆழ்த்தி - விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும்

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடம் கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத் தாமருவில் - பலியேல்
கடவுள் அவிர் சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர் சிறையப் புள் அரசைப் பார்த்து

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூா உம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதாது உலகில்
நிறை இருளை நீக்கும் மேல் நின்று

பொய்ப் புலன்கண் ஐந்து நோய் புல்லியர் பால் அன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பின்
சுழற்றும் கொல் கல்தூணைச் சூறாவளி போய்
சுழற்றும் சிறுபுன் துரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை - திருத்திழாய்
சீதநீர் பொள்ளல் சிறு குடத்து நில்லாது
வீதலோ? நிற்றல் வியப்பு

பெருக்க மொடு சுருக்கம் பெற்ற பொருட்டு ஏற்ப
விரப்பமொடு கொடுப்பர் மேலோர் - சுரக்கும்
மலையளவு நின்ற முலைமாதே மதியின்
கலையளவு நின்ற கதிர்

தொலையாப் பெரும் செல்வத் தோற்றத்தோம் என்று
தலையாயவர் செருக்குச் சார்தல் இலையால்
இரைக்கும் வண்டு ஊதும் மலர் ஈர்ங்கோதாய் மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு

இல்லானுக்கு அன்பு இங்கு இடம் பொருள் ஏவல் மற்று
எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும் நல்லாய்
மொழியிலார்க்கு ஏதமுது நூல் தெரியும்
விழியிலார்க்கு ஏது விளக்கு

தம்மையும் தங்கள் தலைமையும் பார்த்து உயர்ந்தோர்
தம்மை மதியார் தமை அடைந்தோர் - தம்மின்
இழியினும் செல்வர் இடர் தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல்

எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்றவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ!
நின்று பயன் உதவி நிற்பது அரம்பையின் கீழ்
கன்றும் உதவும் கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சொலால் அன்றி இருநீர் வியன் உலகம்
வன்சொல்லால் என்றும் மகிழாதே - பொன் செய்
அதிர் வளையாய்! பொங்காது அழல் கதிரால் தண்என்
கதிர் வரவால் பொங்கும் கடல்

நல்லோர் வரவால் நகைமுகம் கொண்டு இன்புறீ,
அல்லோர் வரவான் அழுங் குவர் - வல்லோர்
திருந்தும் தளிர் காட்டி தென்றல் வரத் தேமா
வருந்தும் சுழற்கால் வர

பெரியவர் தம் நோய் போல் பிறர் நோய் கண்டு உள்ளம்
எரியின் இழுது ஆவர் என்க - தெரி இழாய்
மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக்
கண்டு கலுழமே கண்

எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்து அறிவார் காணின் இலையாம் - எழுத்து அறிவார்
ஆயும் கடவுள் அவிர் சடைமுன் கண்ட அளவில்
வீயும் சுரநீர் மிகை

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க - நீக்கு
பவர் யார்? அரவின் பருமணி கண்டு என்று
கவரார் கடலின் கடு

பகர்ச்சி மடவார் பயில நோன்பு ஆற்றல்
திகழ்ச்சி தரு நெஞ்சத் திட்பம் - நெசிழ்ச்சி
பெறும் பூரிக்கின்ற முலைப் பேதாய்! பல்கால்
எறும்பு ஊரக் கல் குழியுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு குணம் இங்கு ஒருவர்க்கு எனினும் கீழ்
கொண்டு புகல்வது அவர் குற்றமே - வண்டு மலர்ச்சேக்கை விரும்பும்
செழும் பொழில்வாய் வேம்பு அன்றோ
காக்கை விரும்பும் கனி

கல்லா அறிவிற் கயவர்பால் கற்று உணர்ந்த
நல்லார் தமது கனம் நண்ணாரே - வில்லார்
கணையிற் பொலியும் கருங்கண்ணாய்! நொய்மாம்
புனையில் புகும் ஒண் பொருள்

உடலின் சிறுமை கண்டு ஒண் புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண் அளவாய் நின்றதோ காணும் கதிர் ஒளிதான்
விண் அளவாயிற்றோ விளம்பு

கைம்மாறும் உகவாமல் கற்று அறிந்தோர் மெய் வருத்திக்
தம்மால் இயல் உதவி தாம் செய்வார் - அம்மா
முளைக்கும் எயிறு முதிர் சுவை நாவிற்கு
விளைக்கும் வலியன தாம் மென்று

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளம்
கனிவினும் நல்கார் கயவர் - நனி விளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்து
ஆயினும் ஆமோ அறை

உடற்கு வரும் இடர் ஓங்குபரத்து உற்றோர்
அடுக்கும் ஒரு கொடியாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியாய் அஞ்சுமோ
மண்ணிற் புலியை மதிமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் கொடும் கூற்றம் கொள்வான் குறுகுதன்முன்
உள்ளங்கனிந்து அறம் செய்து உய்கவே - வெள்ளம்!
வருவதற்கு முன்னர் அணை கொலி வையார்
பெருகுதற் கண் என் செய்வார் பேசு

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன் மேல்
கை சென்று தாங்கும் கடிது

பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவெ - தன்னுதால்!
காழ் உன்று உயர் திண் கதவு வலியுடைத்தோ
தாழ் ஒன்று இலதாயில் தான்

எள்ளாது இரப்ப இழிஞர் போற்றற்கு உரியர்
விள்ளா அறிஞர் அது வேண்டாரே - தள்ளாக்
கரை காப்பு உளது நீர் கட்டு குளம் அன்றிக்
கரை காப்பு உளதோ கடல்

அறிவுடையார் அன்றி அது பெறார் தம்பால்
செறி பழியை அஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணம் செய்வாள் விழியே அன்றி மறை குருட்டுக்
கண் அஞ்சுமோ இருளைக் கண்டு

கற்ற அறிவினரைக் காமறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியாரே - வெற்றி நெடும்
வேல் வேண்டும் வாள் விழியாய்! வேண்டா புளிங்காடி
பால் வேண்டும் வாழைப்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல் என்று
மிக்கார்க்கு உதவார் விழுமியோர் - எக்காலும்
நெல்லுக்கு இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக்கு இறைப்பாரோ போய்

பெரியார் முன் தன்னைப் புகழ்ந்து உரைத்த பேதை
தரியாது உயர்வு அகன்று தாழும் - தெரியாய் சொல்
பொன் உயர்வு தீர்த்த புனர் முலையாய்! விந்தமலை
தன் உயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து

நல்லார் செய்யும் கேண்மை நாள்தோறும் நன்றாகும்
அல்லார் செய்யும் கேண்மை ஆகாதே - நல்லாய் கேள்
காய் முற்றின் தின்தீங் கனியாம் இளம் தளிர் தாள்
போய் முற்றின் என் ஆகிப் போம்

கற்று அறியார் செய்யும் கடுநம்பும் தாங்கூடி
உற்றுழியும் தீமை நிகழ்வை உள்ளதே - பொற்றொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடி மென் பூ மலர்ந்த
அன்றே மனமுடைய தாம்

பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம மற்று ஒவார் - மின்னுமணி
பூணும் பிற உறுப்புப் பொன்னே அது புனையாக்
காணும் கண் ஒக்குமோ காண்

நன்னெறி முற்றும்

உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை. ~ வோல்டன்

நல்லதை செய்கிறவன் உன்னுடைய எதிரியாக இருந்தாலும் அவனிடம் சேர மறுக்காதே. ஆனால் கெட்டதை செய்கிறவன் உன்னுடைய நண்பனாக இருந்தாலும் அவனிடம் இருந்து விலக தயங்காதே. ~ ப்ரெட்ரீக் டக்ளஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை

## கடவுள் வாழ்த்து

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

## நூல்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல்?' எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். 1

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். 2

இன்னா இளமை வறுமைவந்து எய்தியக்கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக்கு அழகு. 3

அட்டாலும் பால்சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லர் - நண்பு அல்லார்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ? - கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து விளையுமோ தான். 6

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம். 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. 8

தீயாரைக் காண்பதுவும் தீதே திருஅற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது. 9

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லோர்க்கும் பெய்யும் மழை. 10

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையோர்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல். 11

மடல் பெரிது தழை மகிழ் இனிது கந்தம்
உடல்சிறியர் என்று இருக்கவேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டுஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டா தவன்நன் மரம். 13

கான மயில்ஆடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதவன் கற்ற கவி. 14

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்குஅறியா
புல்அறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். 15

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓடஉறுமீன் வரும்அளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 16

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. 17

சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்? - சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் - என் ஆகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்? 18

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன். 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு. 20

இல்லாள் அகத்துஇருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலிகிடந்த தூறாய் விடும். 21

எழுதியவாறே காண்; இரங்கும் மடநெஞ்சே!
கருதியவாறு ஆமோ கருமம்? - சுருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை. 22

கல்பிளவோடு ஒப்பர் கயவர்; கடும்சினத்துப்
பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - வில்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம். 23

நற்தாமரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 24

நஞ்சு உடைமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறம்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். 25

மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்புஇல்லை கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாத மாந்தர்க்குக் கற்றுஉணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம்கூற்றம் - மெல்லிய
வாழைக்கு தான்ஈன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்துஒழுகாப் பெண். 27

சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது; ஆதலால் - தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று? 28

மருவுஇனிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போது அவளோடும் ஆகும்: அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம். 29

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். 30

கர்வம் கொள்ளாதே கடவுளை இழப்பாய். பொறமை கொள்ளாதே நண்பனை இழப்பாய். கோபம் கொள்ளாதே உன்னையே இழப்பாய்.

சரியாக சிந்திக்க தெரிந்து கொண்டால் வெற்றி என்பது வெகு சுலபம்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய். உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய். உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.

~ சுவாமி விவேகானந்தர்

நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்து வை. முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை. முதலில் படியை ஏறு.

~ மார்டின் லூதர் கிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நீதி

## காப்பு

உலகநீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனில் போக வேண்டாம்
போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவு என்று நம்ப வேண்டாம்
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்து இருந்தார் வாசல் வழிச் சேர வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனம் தேடும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடை மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்
மற்று நிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரில் புறம் கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்வந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்த புகழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைத் செப்பாய் நெஞ்சே

கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கு அழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்
எளியோரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனம் காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே

சேராத இடம் தனிலே சேர வேண்டாம்
செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணை போகித் திரிய வேண்டாம்
வாராரும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

மண் நின்று மண் ஓரம் சொல்ல வேண்டாம்
மனம் சலித்துச் சிலிக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண் அழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையை கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்
புறம் சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
மண்அளந்தான் தங்கை உமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

மறம் பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கு அழிவு சொல்ல வேண்டாம்
திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம் பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சு பேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அது ஏது இங்கு என்னில் சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் தன் கூலி
சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சு அறுத்த மருத்துவச்சி கூலி
மகா நோவுதனைத் தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொல்லுடன் இவர் கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ எமன்றானே

கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே

ஆதரித்துப் பலவகையால் பொருள்கள் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடி வைத்த உலக நீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிக வாழ்ந்து புகழும் தேடிப்
பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே

உலக நீதி மூலம் முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



இவ்வுலகை விட்டு இறைவனடி எய்திய
எங்கள் தலைமகன் நோயினால் பீடித்திருந்த
நேரம் எமக்கு பல உதவிகள் புரிந்து
ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும்,
சிவபதம் எய்தியமை அறிந்து அவரது
இறுதிச் சடங்குகளில் பங்குபற்றிய யாவர்க்கும்,
தொலைபேசி, குறுந்தகவல், மின்னஞ்சல், முகப்பக்கம் மூலம்
அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும்,
மலர்வளையங்கள் அனுப்பி ஆறுதல் கூறியவர்களுக்கும்,
ஈமக்கிரியை ஒழுங்குகளை கவனித்த உறவினர்,
நண்பர்கள், ஏனைய அன்பர்கள் அனைவருக்கும்
இந்நினைவுமலரை குறுகிய காலத்தில் சிறப்பாக அமைத்து
கொடுத்துதவிய நியூ ஜெட் பிரின்ட்ஸ் உரிமையாளருக்கும்
எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

**30.05.2015**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி**
**மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும்,**
**ஏற்பட்ட விரிசல்கள் பெரிதாகாமல் இருக்கவும்**

* நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
* அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்.
* எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக் கொடுங்கள்.
* சிலநேரங்களில் சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
* நீங்கள் சொன்னதே சரி. செய்ததே சரி என்று வாதிடாதீர்கள்.
* குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
* உண்மை எது. பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும். அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விட்டுவிடுங்கள்.
* மற்றவர்களை விட உங்களையே உயர்வாக நினைத்து கர்வப்படாதீர்கள்.
* அளவுக்கதிகமாய். தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
* எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
* கேள்விப்படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.
* உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
* மற்றவர் கருத்துக்களை. செயல்களை. நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
* மற்றவர்களுக்கு மரியாதையைக் காட்டவும். இனிய. இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
* புன்முறுவல் காட்டவும். சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாததுபோல் நடந்து கொள்ளாதீர்கள்.
* பேச்சிலும். நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும். தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து. அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
* அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
* பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்கள் பேச்சைத் தொடங்க முன்வாருங்கள்.

New Jet : 2364568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org